**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC 120/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : நிஜாமைதீன் | | |
| | | Taluk | : |
| Father's/Husband's Name | : அப்துல் ஜபார் | Age | : 53 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09/10/2023**

<u>**முதல் விசாரணை**</u>

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி கடந்த 2017 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் கடைசி வாரம் எதிரி எனது வீட்டிற்கு வந்து தனது குடும்ப செலவிற்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும் ரூ.75,80,000/-கடனாக கேட்டார். நான் பணத்தை ஏற்பாடு செய்து கொடுப்பதாக கூறி அதன் படி 01/09/2017 ம் தேதியன்று எனது வங்கி கணக்குள்ள சிட்டி யூனியன் வங்கியின் மூலமாக ரூ.27,00,000/-மும் 16/10/2017 ம் தேதி கும்பகோணம் ஐடிபிஐ வங்கி கிளை வங்கியில் இருந்து ரூ.11,00,000 மும், 29/10/2017 ம் தேதி சோழபுரம் கிளை இந்தியன் வங்கி மூலமாக ரூ.8,80,000/- மற்றும் ரூ.29,00,000/-மும் ஆக மொத்தம் ரூ.75,80,000/- எதிரியின் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். மேற்படி கடனை திருப்பி கேட்டபோது 14/05/2019 ம் தேதி எதிரி நான்

கணக்கு வைத்துள்ள சோழபுரம் கிளை இந்தியன் வங்கி கணக்கிற்கு ரூ.25,00,000/-மட்டும் திருப்பி அனுப்பினார். மீதமுள்ள ரூ.50,80,000/-க்கு கடந்த 17/11/2019 ம் தேதி எனது வீட்டிற்கு வந்த சென்னை நுங்கம்பாக்கம் கிளை கரூர் வைசியா வங்கியின் 21/01/2020 ம் தேதியிட்ட ரூ. 50,00,000/-க்கான காசோலையை அளித்தார். **(அந்த காசோலை பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த காசோலையை நான் கணக்கு வைத்துள்ள சோழபுரம் இந்தியன் வங்கியில் 21/01/2020 அன்று வசூலுக்காக தாக்கல் செய்தேன். (**அதற்கான செலுத்து சீட்டு பு.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) ஆனால் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று 24/01/2020 அன்று திருப்புதல் குறிப்பாணை மூலமாக திருப்பபட்டது. ( **மேற்படி திருப்புதல் குறிப்பாணை பு.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு கடந்த 03/02/2020 அன்று எனது வழக்கறிஞர் மூலமாக எதிரியின் வீட்டு முகவரிக்கும், அலுவலக முகவரிக்கும் அறிவிப்பு அனுப்பினேன். (**அந்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி இரண்டு அறிவிப்பினையும் எதிரி 04/02/2020 அன்று பெற்றுக்கொண்டுள்ளார். **(மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் முறையே பு.சா.ஆ.5 மற்றும் பு.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனவே என்னிடம் கடன் பெற்று தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்து எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில்

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**